

சோழிங்கநல்லூர் கண்ணகி நகர் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப்பகுதியில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடம் கட்டுமானப் பணிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன், நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய நிர்வாக இயக்குநர் சங்கர் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளனர்.




கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி – மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (01.07.2023) இராணிப்பேட்டை மாவட்டம் திமிரி வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை மற்றும் தமிழ்நாடு திட்டக்குழு இணைந்து செயல்படுத்தும் குழந்தையின் வாழ்வின் முதல் 1000 நல்நாட்கள் கர்ப்பிணி தாய்மார்களுக்கான கர்ப்ப காலத்தில் வழங்கப்படும் சிறப்பு நிதியுதவித் திட்டத்தினை தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு முதல் தவணையினை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ச.வளர்மதி, ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன். இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை மரு.செல்வ விநாயகம், இணை இயக்குநர் மகப்பேரு மற்றும் குழந்தைகள் நலம் மரு.நிர்மல்சன், துணை இயக்குநர் பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை மரு.மணிமாறன், ஒன்றியக் குழுத் தலைவர் அசோக், துணைத் தலைவர் ரமேஷ், பேரூராட்சி தலைவர் திருமதி.மாலா இளஞ்செழியன் மற்றும் பலர் உள்ளனர்.

### தமிழ்நாட்டில் குறைந்தபட்ச ஆதார விலையில் நெல் கொள்முதல்:

# பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை பொய்யாக அறிக்கை விடுகிறார்!

### தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்ப்ளாயீஸ் யூனியன் பொதுச்செயலாளர் கோ.சி.வள்ளுவன் அறிக்கை!

சென்னை, ஜூலை 2-

தமிழ்நாட்டில் நெல் குறைந்தபட்ச ஆதார விலையில் கொள்முதல் செய்வதாக, பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை பொய்யாக அறிக்கை விடுகிறார் என தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் எம்ப்ளாயீஸ் யூனியன் பொதுச்செயலாளர் கோ.சி.வள்ளுவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இந்தியாவிலேயே முதல் முதலாக விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லை அவர்களுக்கு கட்டுப்படியான விலையில் கொள்முதல் செய்து அந்த நெல்லை அரவை செய்து பொதுவிநியோகத் திட்டத்தின் மூலம் குறைந்த விலையில் விற்பனை செய்யும் ஓர் அற்புதமான திட்டத்தினை தமிழகத்தில் கொண்டு வந்து விவசாயிகளின் கண்ணீரை துடைத்தது கழக அரசு. மேலும் பொதுமக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை நியாயமான விலையில் கிடைப்பதற்கான வழி வகையினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் செய்யப்பட்டது கழக ஆட்சியில்தான்.

இந்தியா முழுவதும் தமிழகத்தை தவிர மற்ற மாநிலங்களில் உணவுப் பொருட்களான நெல், கோதுமை ஆகியவற்றை தனியார் ஏஜெண்டுகள் மூலம் கொள்முதல் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. அதில் கூட முழுமையாக கொள்முதல் செய்யப்படாமல் ஆங்காங்கு மக்கள் அவதிப்படுவதை பத்திரிகை வாயிலாக அண்ணாமலை அறிந்திருப்பார் என்பது நமக்குத் தெரியவில்லை.

ஆனால் தமிழகத்தில் விவசாயிகள் விளைவித்து அவர்கள் கொண்டு வருகின்ற அனைத்து தரமான நெல்மணிகளையும் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் இயங்கி வருகின்ற தமிழ்நாடு அரசு கொள்முதல் செய்து வருகிறது. இதனால் தமிழ்நாடு விவசாயிகள் மகிழ்ச்சியுடன் இருக்கின்றார்கள்.

முதலில் டெல்டா மாவட்டத்தில் மட்டும் கொள்முதல் பணி நடைபெற்று வந்தது. ஆனால் கழக ஆட்சியில்தான் அனைத்து மாவட்டங்களிலும் சுமார் 5000 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றது. இந்த நிலையங்கள் ஆண்டுக்கு இரு முறை பருவ காலங்களில் செயல்பட்டு வருகின்றது. இதில் சுமார் 15,000 அலுவலர்களும், 50,000 சுமை தூக்கும் தொழிலாளர்களும் பணியாற்றி வருகின்றார்கள். தளபதி தலைமையில் திராவிட ஆட்சி மலர்ந்தவுடன் கொள்முதல் பணியாளர்களுக்கும், சுமை தூக்குவோருக்கும் ஊதிய உயர்வுகள் அளித்து அவர்களுடைய வாழ்வாதாரத்தை செம்மைப்படுத்தி உள்ளார்கள்.

கிராமப்புறத்தை சார்ந்தவர்களுக்கு அதுவும் கல்வி குறைவாக கற்றவர்களுக்கு ஆண்டுக்கு 1 லட்சம் ரூபாய்க்கு மேல் பருவ காலத்தில் ஊதியம் பெறச் செய்திருப்பது திராவிட மாடல் ஆட்சியின் சாதனையாகும்.

ஆனால் மோடியின் ஆட்சியிலே பொதுத்துறை நிறுவனங்களை விற்று, ரயில் போன்றவற்றை தனியார் மயமாக்கி, காணும் இடமெல்லாம் காண்டிராக்ட் தொழிலாளர்களாகவும், அலுவலகங்கள் அனைத்திலும் சி & டி பணியிடங்கள் நிரப்பப்படாமல் அலுவலங்கள் காலியாக இருப்பதும் அங்கே கூட அவுட்சோர்சிங் முறையில் பணிகள் செய்வதை தற்பொழுது பா.ஜ.க.வின் தமிழ்நாட்டு அவுட்சோர்சிங் அண்ணாமலைக்குத் தெரியாமல் இருப்பதில் நியாயமில்லை.

மற்ற மாநிலங்களை விட நெல்லுக்கு குறைந்தபட்ச ஆதார விலையில் அனைத்து நெல்லையும் கொள்முதல் செய்யும் இந்த அளவில் தமிழ்நாடு நடைபோட்டு வருகின்றது. இதனை ஆண்டு கொண்டிருக்கின்ற திராவிட மாடல் ஆட்சி செய்து வரும் தமிழக முதல்வர் மீது வீண் பழி சுமத்துவதற்காக கொள்முதல் ஊழல் என்று அண்ணாமலைகளும் பொய்ப்புரட்டுகளை இனி யாவது நிறுத்திக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு : ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதியில் 5 இடங்களில்

# ஏழை எளியோர்க்கு அறுசுவை உணவு: தயாநிதி மாறன் எம்.பி. வழங்குகிறார்!

### நே.சிற்றரசு - அன்பகம் கலை - எழிலன் நாகநாதன் முன்னிலை! மா.பா.அன்புதுரை அறிவிப்பு!

சென்னை, ஜூலை 2-

ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக்குட்பட்ட 5 இடங்களில் ஏழை எளிய மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சிகள் இன்று (2.7.2023) காலை 11 மணிமுதல் நடைபெறுகின்றன.

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, டாக்டர் எழிலன், நாகநாதன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் இந்நிகழ்ச்சிகளில் - கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., கலந்துகொண்டு, ஏழை எளிய மக்களுக்கு அறுசுவை உணவு வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்கள் விபரம் வருமாறு:-

111வது வட்டம் - அஜீஸ் முல்க் 5வது தெரு, தலைமை : ஆர்.பாபு,

111 'அ' வட்டம் - ரங்கூன் தெரு - தலைமை: எப். பீட்டர் ஜான்

113 'அ' வட்டம் - கங்கை கரைபுரம் (பி.ஆர்.எஸ்.மருத்துவமனை அருகில்) தலைமை: த.தேவராஜ்,

113 'ஆ' வட்டம் - இராம காமத்துபுரம் - தலைமை: எம்.என்.விஷ்ணு

118வது வட்டம் - பி.வி. கோயில் 2வது தெரு - தலைமை: கோ.யுவராஜ்,

118 'அ' வட்டம் - போயஸ் சாலை - இளங்கோ சாலை சந்திப்பு தலைமை: எஸ்.என்.கே.ராமன்,

இந்நிகழ்வுகளில் மாவட்ட, பகுதி வட்ட, கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக தோழர்கள், மூத்த முன்னோடிகள் கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை கேட்டுக்கொண்டுள்ளார்.

### என்.மருதுகணேஷ் தலைமை ! ச.தமிழ்ச்செல்வன் முன்னிலையில்

# சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் ஆதரவற்ற மாணவ மாணவிகளுக்கு உணவு!

### மிசா கணேசன் வழங்கினார் ! இரா.லட்சுமணன், ஜெபதாஸ்பாண்டியன், பங்கேற்பு !

சென்னை, ஜூலை 2-

சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நாள் தொடக்க விழாவையொட்டி வண்ணாரப்பேட்டையில் உள்ள ஆதரவற்றோர் இல்லத்தில் உணவு வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட அமைப்பாளர் என்.மருதுகணேஷ் தலைமையில் வட்டச்செயலாளர் ச.தமிழ்செல்வன் முன்னிலையில் பகுதி அமைப்பாளர்கள் எஸ்.சேகர், எஸ்.சரவணகுமார் ஆகியோர் வரவேற்பில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மிசா. கணேசன் பங்கேற்று பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி, மரக்கன்றுகளை நட்டுவைத்து ஆதரவற்ற மாணவ மாணவிகளுக்கு உணவு மற்றும் கல்வி உபகரணங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பகுதி செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், ஆர்.டி.ராஜா, கே.பாலு, மா.ரூபசங்கர், ஜெ.சுரேஷ்பாபு, ப.ஆ.சண்முகம், எஸ்.மகேஸ்வரி, எம்.கலைவாணி, வி.அருள், எஸ் ஹரிஷ்,வி. மோகன், கோ.கார்த்திக், வழக்கறிஞர்கள், எஸ்.பி.எஸ்.புத்தன், கே.தேவபிரசாத், சி.ஸ்ரீதர், ஜி.ஹரிராமன், எஸ்.எம்.டி.ரவிச்சந்திரன், வி.கார்த்திக், டி.கிருஷ்ணமூர்த்தி, டி.சீனிவாசன், ஏ.விந்தன், எ.சாந்தகுமார், ஆர்.மகேஸ்வரன், சுகன்யா சீனிவாசன், எஸ்.ராஜு, கே.தேவதாஸ், கே.மணி, ஜி.எம்.பிரபு, த.குமரேசன்,சவுண்டு குமார், எஸ்.உதயசூரியன், எஸ்.லோகநாதன், எஸ்.டி.பாபு, எஸ்.செல்லத்துரை, எல்.கோகுலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

### தி.மு.க. தலைமைக் கழக

# செய்தி தொடர்புக்குழு மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, ஜூலை 2-

தி.மு.க. செய்தி தொடர்புக்குழுவின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (1-7-2023), சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் தலைமையில், செய்தி தொடர்பு செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் வரவேற்புரையாற்றிட, இணைச் செயலாளர்கள் தமிழன் பிரசன்னா, சிவ.ஜெயராஜ், துணைத் தலைவர் ஆண்டாள் பிரியதர்ஷினி, துணைச் செயலாளர்கள் சையத் ஹபீஸ், சித்திக், கோவை செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், எம்.பி., கலந்து கொண்டு "அமலாக்கத் துறை உரிமைகளும், கடமைகளும் மற்றும் ஆளுநரின் விருப்புரிமையும் அரசியலமைப்பு கடமைகளும்" எனும் தலைப்பில் கருத்துரைகள் வழங்கினார்.

அத்துடன், இன்றைய அரசியல் சூழல் குறித்தும் இதில் கழகத் தலைவர் அவர்கள் எடுக்கும் நிலைப்பாட்டினையும் ஊடகம், பத்திரிகை மற்றும் சமூக வலைதளங்கள் வாயிலாக பொதுமக்களிடம் கொண்டு சேர்த்திடும் பணி குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், கவிஞர் மனுஷ்யபுத்திரன், கலாநிதி வீராசாமி, எம்.பி., கோவி. செழியன், இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., கவிஞர் தமிழ்தாசன், வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, வி.பி.கலைராஜன், மதுரை பாலா, சேலம் தரணிதரன், வி.சி.சந்திரகுமார், திருமதி பத்மபிரியா, ப.மதிவாணன், குடியாத்தம் குமரன், விக்னேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

1) தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, சென்னைஅண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரைகலைஞர் நூற்றாண்டு நூலகம், கும்பகோணம் ஆகிய மூன்று இடங்களில் "கலைஞரின் சாதனைகளை" விளக்கி சிறப்பு கருத்தரங்கங்கள் நடத்துவது எனவும்;

2) திராவிட கருத்தியலை இளைஞர்களை கொண்டு சேர்க்கும் கழகத் தலைவர் அவர்கள் அறிவிக்கும் அனைத்து நிகழ்வுகளிலும் சிறப்பாக பங்களித்து, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கழகத்தின் வெற்றிக்கு வலு சேர்ப்பது எனவும்;

3) செய்தித் தொடர்புக்குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவனின் நாடாளுமன்ற பணிகளைப் பாராட்டி எஸ்.டி.பி.ஐ. அமைப்பு விருது வழங்கியமைக்கும் வாழ்த்து தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்ட பேருந்து:

# மக்கள் பயன்பாட்டிற்காக அதே வழித் தடத்தில் இயக்கம்!

### ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

திருவள்ளூர், ஜூலை 2-

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதி குட்பட்ட திருவேற்காடு நகரத்திற்குட்பட்ட மேல் அயனம்பாக்கம் பகுதியில் இருந்து அம்பத்தூர் வரை சென்றுக்கொண்டிருந்த 20P என்ற அரசு பேருந்தை கடந்த அதிமுக ஆட்சியில் மக்கள் பயன்பாட்டிற்கு செயல்படுத்தாமல் நிறுத்தி வைக்கப்பட்டது.

மீண்டும் திமுக ஆட்சி தொடர்ந்ததும் 5 ஆண்டுகளாக செயல்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பேருந்தை மக்கள் பயன்பாட்டிற்க்கு இயக்கிட வேண்டும் என முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளருமான ஆவடி சா.மு. நாசர் அவர்களிடம் பகுதிமக்கள் கோரிக்கையை மனுவாக அளித்தனர்.

அதனை தொடர்ந்து மேல் அயனம்பாக்கம் பகுதியில் இருந்து அம்பத்தூர் வரையிலான 20 P வழித்தட பேருந்தை மீண்டும் இயக்கிடவும் மக்கள் பயன்பாட்டிற்காக பேருந்து துவக்க விழா நடைபெற்றது இதில் திருவேற்காடு நகர மன்றத் தலைவர் என்.இ.கே.மூர்த்தி தலைமை தாங்கினார் வார்டு கவுன்சிலர் பி.பிரதானம் வரவேற்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கலந்து கொண்டு கொடியசைத்து துவைக்கி வைத்தார்.

மீண்டும் மக்களின் பயன்பாட்டிற்கு பேருந்தை இயக்கப்பட்டதற்கு தமிழ்நாடு முதலமைச்சருக்கும் மாவட்ட செயலாளருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர். இயக்கப்பட்ட. பேருந்தை நாசர் எம்.எல்.ஏ. பயணம் மேற்க்கொண்டு உடன்பயணம் செய்தவர்களுக்காக பயண சீட்டுக்களை கட்டணம் செலுத்தி பெற்றுக்கொண்டார்.

இதில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநகர போக்குவரத்து மேலாண்மை இயக்குனர் அன்புஆபிரகாம், நகராட்சி ஆணையர் ஜஹாங்கிர் பாஷா, பொறியாளர் அ.பு.குமார், சுகாதார அலுவலர் ஆல்பர்ட் அருள் ராஜ், ஆவடி மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், மாவட்ட நிர்வாகிகள் எஸ்.ஜெயபாலன், ஜி. ராஜேந்திரன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ.பவுல், மற்றும் நகர கழக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் வட்டச் செயலாளர்கள் எஸ்.சங்கர், ஜெ.சரவணன், அ.க.நடராஜ், தெய்வசிகாமணி, துரைகோபால், செல்லதுரை, கே.பி.எஸ்.சுதாகர், பரிசமுத்து, இளையராஜா, என்.ராஜி, நாராயணன், நரேஷ், கே.பெருமாள், மோகன் தாஸ் உள்பட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 42(அ) வட்டக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் வட்ட செயலாளர் ச.தமிழ்ச்செல்வன் தலைமையில், பகுதிச்செயலாளர் இரா.லட்சுமணன், என்.மருதுகணேஷ், இர. பொன்இளவரசன், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு எம்.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், ப.குமார், ப.ஆ.சண்முகம், மா.ரூபசங்கர், பி.கே.மூர்த்தி, கோ.ஹரி ராமன் ஆகியோர் முன்னிலையில் மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், ஒப்பிலாமணி, ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாவட்டச்செயலாளர் தா.இளையஅருணா, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆகியோர் நலத் திட்ட உதவிகள் வழங்கினர். நிகழ்ச்சியில் எஸ்.மோகன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், நேதாஜி யு.கணேசன், இரா. கருணா, கா.நாகம்மை, ப.சோமசுந்தரமூர்த்தி, மு.கோபி, கி.ராஜேந்திரன், நா.சண்முகம், ஏ.டி.மணி, எஸ்.பி.எஸ். புத்தன், ஏ.ரமேஷ்பாபு, லஷ்மிவேலு, எம்.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், பி.சீனிவாசன், கு.ரமேஷ், எஸ். கே.இளங்கோ, என்.எம்.கதிரேசன், த.வா.மு.கஜேந்திரன்,நா.கோதண்டன், மா.நாகராஜன், பொ.து.ராஜா, வீ.வடிவேல், மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


4 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி 02.07.2023



தியாகராயநகர் மேற்கு பகுதி செயலாளர்

கே.ஏழுமலை M.C.,

கே.ராஜீ

ஆகியோரின் தாயார்

திருமதி. கு.சொக்கம்மாள் (எ)பொற்கலையம்மாள்

மறைவு: 02.07.2019

என்றும் நீங்கா நினைவுகளுடன்

மகள்கள்: கே.செங்கேணி ✦ எஸ்.எல்லம்மாள்

பேரன்: ஏ.கார்த்திக்

SF சூர்யா பவுண்டேசன்